(6 pages) Reg. No. : ......................

**Code No. : 10493** **Sub. Code : C 1 TL 21**

U.G. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2023.

Second Semester

Part I – Tamil

பொதுத் தமிழ் – தாள் II

(For those who joined in July 2021 – 2022)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

சரியான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக :

1. தாயுமிலி தந்தையிலி தான் தனியன் – யார்?

(அ) சிவபெருமான் (ஆ) மாணிக்கவாசகர்

(இ) தாயுமானவர் (ஈ) திருநாவுக்கரசர்

2. பின்றையே நின்றது எது என நாலடியார் கூறுகிறது?

(அ) கூற்றம் (ஆ) பாவம்

(இ) நிழல் (ஈ) வினை

3. கீழ்வருவனவற்றுள் பொதுமொழி எது?

(அ) தாமரை (ஆ) நிலம்

(இ) அறம் (ஈ) நட

4. 'தந்தையும் வந்தார்' என்ற தொடரில் இடம் பெற்றுள்ள உம்மை இடைச்சொல் என்ன பொருளில் வந்துள்ளது?

(அ) எதிர்மறை (ஆ) முற்று

(இ) சிறப்பு (ஈ) எச்சம்

5. கணித மேதை ராமானுஜத்தின் மேதாவிலாசம் வெளிப்படக் காரணமாக இருந்தவர் யார்?

(அ) ஹார்டி

(ஆ) ஜான் ஜோசப் ஆல்டர்

(இ) ஜார்ஜ்

(ஈ) ஹென்றி போர்டு

6. அரசியல் சட்ட மேதை அம்பேத்கரின் இயற்பெயர் என்ன?

(அ) சிவாஜிராவ் (ஆ) பீமாராவ்

(இ) சீனிவாச சாஸ்திரி (ஈ) இராஜமாணிக்கம்

7. சுந்தரனாரின் மகன் பெயர்

(அ) பெருமாள் பிள்ளை

(ஆ) கணபதி பிள்ளை

(இ) ராமசாமி பிள்ளை

(ஈ) நடராஜ பிள்ளை



8. 'கொல்லம்' என்ற சொல் எதனைக் குறிப்பிடுகிறது?

(அ) சேர நாடு (ஆ) மலையாள ஆண்டு

(இ) ஓர் ஊர் (ஈ) கல்வெட்டு

9. விப்ர நாராயணன் என்ற இயற்பெயர் கொண்ட ஆழ்வார் யார்?

(அ) குலசேகர ஆழ்வார்

(ஆ) தொண்டரடிப்பொடி ஆழ்வார்

(இ) திருப்பாணாழ்வார்

(ஈ) திருமங்கை ஆழ்வார்.

10. 'நன்னூல்' என்ற இலக்கண நூலை இயற்றியவர் யார்?

(அ) பவணந்தியார் (ஆ) அமிர்தசாகரர்

(இ) நாற்கவிராச நம்பி (ஈ) குணவீர பண்டிதர்.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) இறைவனை வணங்கினால் கிடைக்கும் பலன்கள் எவை என ஆண்டாள் கூறியுள்ளார்?

(அல்லது)

(ஆ) 'கல்வியழகே அழகு' எனக் குமரகுருபரர் ஏன் கூறியுள்ளார் என்பதை எடுத்துரைக்க.



12. (அ) வியங்கோள் வினைமுற்றைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒகார இடைச்சொல் எத்தனைப் பொருள்களைத் தரும்? அவை யாவை?

13. (அ) 'ஓங்கி உலகு வெல்லும் உயர்வான சொல்லாட்சி' பற்றி நீவிர் அறிந்தவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) நேர்வழியிலான மனப்போக்கு தரும் நன்மைகள் பற்றிய நும் கருத்தினைப் புலப்படுத்துக.

14. (அ) சுந்தரனார் அறிஞர்களோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'மனோன்மணியம்' நாடகத்தின் அமைப்புப் பற்றி நீவிர் அறிந்தவை யாவை?

15. (ஆ) தேவாரம் இயற்றிய அப்பர் பற்றிக் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) வீரமாமுனிவர் பற்றிக் குறிப்பு வரைக.



Scanned with OKEN Scanner

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) பாவ உணர்ச்சியினை எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை உணர்த்தியவாறு உரைக்க.

(அல்லது)

(ஆ) முன்றுறையரையனார் கூறும் அறக்கருத்துக்கள் பற்றி நீவிர் அறிந்தவை யாவை?

17. (அ) சொல்லின் பொது இலக்கணத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) எழுத்தர் பணி வேண்டி மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று வரைக.

18. (அ) 'சாதனை கண்ட நிகழ்ச்சிகள்' என்ற உரைநடைப் பாடம் உணர்த்தும் கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'காலமறிதல்' பற்றி நீவிர் அறிந்தவற்றைக் கட்டுரைக்க.

19. (அ) சுந்தரனாரின் படிப்பும் பணியும் பற்றிய நும் கருத்தினை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) 'முதற் கல்வெட்டும் திருவிதாங்கூர் வரலாறும்' கட்டுரை வாயிலாக நீவிர் அறிந்த கருத்தினை விளக்குக.



20. (அ) பன்னிரு திருமுறைகள் பற்றி நீவிர் அறிவன யாவை?

(அல்லது)

(ஆ) பௌத்தம் தமிழுக்குச் செய்த தொண்டு பற்றிய நும் கருத்து யாது?

---



Scanned with OKEN Scanner